# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.07.31 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## நிகழ்நிலைக் காப்பு (திருத்தம்)

**2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு
பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *36.00***  **தபாற் செலவு : ரூபா *150.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இலங்கையினுள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆளெவரையும் புரியப்பட்ட தவறொன்றுக்கு ஆளாகும் ஆளெவருக்கும் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் பிரயோகங்களை விரிவுபடுத்த ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கு முன்னதாக அத்தகைய உறுப்பினரின் நீக்கத்துக்கான விசாரணையின் போது, நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை இடைநீக்குவதற்கான சனாதிபதியின் தத்துவத்தை உட்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, உறுப்பினரொருவரின் கோரிக்கையொன்றின் மேல் ஆணைக்குழுவின் கூட்டமொன்றைக் கூட்டுவதற்கு நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவின் தவிசாளர் மறுக்குமிடத்து, காரணங்களை எழுத்தில் அறிவிக்கும் தேவைப்பாடுகளிற்கான ஏற்பாடுகளை வழங்குவதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) நிகழ்நிலை அமைவிடமொன்றுக்கான அணுக்கத்தை இயலாமல் செய்வதற்கு இணைய சேவை வழங்குநர்களுக்கும் இணைய இடையீட்டாளர்களுக்கும் அறிவித்தல்களை வழங்குவதற்கான நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவின் தத்துவத்தை நீக்குவதாகும்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினாலான திருத்தங்களை செய்வதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுக்கு அப்பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை உட்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவினை நீக்குவதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "ஆள்மாறாட்டத்தினால் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிதல்" எனும் தவறினை வரைவிலக்கணப்படுத்தும் அப்பிரிவிற்கு தேவையான திருத்தங்களைச் செய்வதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவினை நீக்குவதாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினை நீக்குவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) இலக்காகவுள்ள ஆளிளொருவரின் ஏதேனும் தனிப்பட்ட தொடர்பாடலை வெளியிடுவதன் மூலம் அத்தகைய ஆளினை தொல்லை செய்யும் உள்நோக்குடன், அறிவித்துள்ள கூற்றுக்கள் தொடர்பில் அப்பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை நீட்டிப்பதாகும்; அத்துடன்

(ஆ) இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்றுடன் தொடர்புடைய தண்டனையை நீக்குவதாகும்.

**வாசகம் *11*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *21* ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஆளொருவரின் வெளிப்படுத்தப்பட்ட சம்மதமின்றி, அத்தகைய ஆளுடன் தொடர்புடைய நிந்தனைக்குட்படுத்துகின்ற அல்லது ஆபாசத்தன்மையினவான புகைப்படங்கள், கேட்பொலி அல்லது காணொளியின் நிகழ்நிலை வெளியீட்டுக்கு அப்பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை நீட்டிப்பதாகும்.

**வாசகம் *12*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *23* ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "சமூக ஊடகக் கணக்குக்கு அல்லது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற இணைய அணுக்கச் சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடம்" எனும் சொற்களை அழிப்பதாகும்.

**வாசகம் *13*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *24* ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "அல்லது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற இணைய சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடம்" எனும் சொற்களை நீக்குவதாகும்.

**வாசகம் *14*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *26* ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கு" எனும் வார்த்தைகளை நீக்குவதாகும்.

**வாசகம் *15*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *27* ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின் (*3*) ஆம் உட்பிரிவின்கீழ் எவருக்கு பொறுப்பு விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாட்களினது வகுதிகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதாகும்.

**வாசகம் *16*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *29* ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது,

(அ) அப்பிரிவின் (*1*) ஆம், (*2*) ஆம் மற்றும் (*3*) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆட்களுக்கு தண்டப்பணம் விதிப்பதற்கு நீதிமன்றத்தை இயலுமானதாக்கும் ஏற்பாடுகளை நீக்குவதாகும்;

(ஆ) நிகழ்நிலை காப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புகளுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமாக செயற்படுத்தத்தக்க படிமுறைகளை எடுக்க இணைய சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளர்கள் மீது கடப்பாட்டை விதிப்பதாகும்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் பணிப்புகளுடன் இணங்கியொழுகி நியாயமான கவனிப்பு மற்றும் நல்லெண்ணத்தில் செய்யப்படுகின்ற அல்லது செய்யாதுவிடப்படுகின்ற ஏதேனும் செயலுக்கு இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களின் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பிலிருந்து விலக்களித்தலாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின்கீழான இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்றுடன் தொடர்புடைய தண்டனையை நீக்குவதாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின்கீழான இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்றுடன் தொடர்புடைய தண்டனையை நீக்குவதாகும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அத்தகைய இணைய இடையீட்டின் சார்பில் நீதவான் முன்னிலையில் தோன்றுவதற்கு இணைய இடையீட்டொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவரை இயலுமாக்குவதாகும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, புலன்விசாரணைகளுடன் தொடர்புடைய ஏற்பாடுகளின் தெளிவுறல்களை வளப்படுத்தவும் அத்தகைய புலன்விசாரணைகளின்போது பெறப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையை பேணவும் ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட தவறுகளுக்கான அப்பிரிவின் ஏற்பாடுகளது ஏற்புடைமையை நீட்டிப்பதாகும்.

***வாசகம் 22*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கு ஏற்புடையற்பாலாவான செயல்முறைக் கோவைகளை வழங்க நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவினை இயலுமானதாக்குவதாகும்.

***வாசகம் 23*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது,

(அ) "பொய்யான கூற்று" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின் நோக்கெல்லையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நல்லெண்ணம் எனும் உருவகத்தினை புறநீக்குவதாகும்; அத்துடன்

(ஆ) "மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கு" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின் தெளிவுபடுத்தலை மேம்படுத்தலுமாகும்.

# நிகழ்நிலைக் காப்பு (திருத்தம்)

ச.வ.ஓ. 13 /2024

## 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) ஆளொருவர், எவரேனுமாள் தொடர்பில் இலங்கையினுள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றவிடத்து.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "கேட்பின்போது சனாதிபதியினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கேட்பின்போது, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, சனாதிபதியினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "தவிசாளர் நல்ல காரணத்துக்காகவல்லாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவிசாளர் எழுத்தில் அத்தகைய உறுப்பினருக்கு அறிவித்த நல்ல காரணத்துக்காகவல்லாது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "அரசியலமைப்பின் உறுப்புரை 105 இன் (3) ஆம் பந்தியில் அல்லது வேறு ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "13 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், "இலங்கையில் உள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, இலங்கையில் உள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவினை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "இலங்கையிலாயினுஞ்சரி" மற்றும் "இயைபான எழுத்திலான சட்டத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே" 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையிலாயினுஞ்சரி" மற்றும் "நீதிமன்ற அவமதிப்புத் தவறு மீதான இயைபான எழுத்திலான சட்டத்தின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புத் தவறைக் கேட்பதற்கும் விளங்குவதற்கும் தீர்மானிப்ப தற்குமான நியாயாதிக்கம், அரசியலமைப்பின் 105 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் அல்லது 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் அல்லது நீதிமன்ற அவமதிப்புத் தவறு பற்றிய வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி தோதான நீதிமன்றத்துக்கு உரித் தாக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை நீக்குதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (அ) "ஏமாற்றுகின்ற அத்தகைய ஆள் என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிகின்ற அத்தகைய ஆள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) "நிகழ்நிலை ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல் என்னும் தவறைப் புரிகின்றார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆள்மாறாட்டம் செய்வதன்மூலம் இச்சட்டத்தின்கீழான தவறொன் றைப் புரிகின்றார்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) "மூன்று இலட்சம் ரூபாவை" என்னும் சொற்களுக் குப் பதிலாக, "இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள்மீது விதிக்கப்பட்ட வேறு ஏதேனும் பொறுப்புக்கு

மேலதிகமாக, மூன்று இலட்சம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"ஆள்மாறாட்டம் செய்வதன் மூலம் இச்சட்டத்தின்கீழான தவறுகளைப் புரிதல்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை நீக்குதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"தொல்லை முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு கூற்றுக்களை அறிவித்தல்

20.(1) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி (இப்பிரிவில், "இலக்காகவுள்ள ஆள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இன்னோராளுக்கு தொல்லையை விளைவிக்கும் உளக்கருத்துடன் இலக்காகவுள்ள ஆளின் அல்லது இலக்காகவுள்ள ஆளுடன் தொடர்புபட்ட ஆளொருவரின் ஏதேனும் அந்தரங்கத் தகவலை அல்லது ஏதேனும் வகையிலான அந்தரங்கத் தொடர்பாடலை வெளிவிடுவதன்மூலம் கூற்றொன்றை வேண்டுமென்று அளிக்கின்ற அல்லது அறிவிக்கின்றவரும் அதன் விளைவாக இலக்காகவுள்ள ஆளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு தொல்லையை ஏற்படுத்துகின்றவருமான எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்ட

ணைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(அ) "தொல்லை" என்பது, ஆளொருவரை அச்சுறுத்தும், அதிர்ச்சியூட்டும் அல்லது துன்பமிழைக்கும் அல்லது ஆளொரு வரின் கௌரவத்தை மீறுகின்ற அல்லது பயமுறுத்தும், மதிப்புக்குறைக்கும், பகையுடைய, அவமானப்படுத்தும் அல் லது தீங்குவிளைவிக்கும் சூழலொன்றை உருவாக்கும் பயன்கொண்டுள்ள அல்லது அத்தகைய எல்லாப் பயன்களையும் கொண்டுள்ள ஒரு செயல் அல்லது நடத்தை எனப் பொருள்படும்.

(ஆ) "அந்தரங்கத் தொடர்பாடல்" என்பது, எவரேனும் ஆள் அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடிய தொலைபேசியூடான தொடர்பாடல் அல்லது வேறேதேனும் வாய்மொழிமூல தொடர்பாடல், ஏதேனும் சமூக ஊடகத்தளமூடான தொடர்பாடல் அல்லது ஏதேனும் எண்ணிம ஊடகத்தளமூடான தொடர்பாடல் உள்ளடங்கலான ஏதேனும் தொடர்பாடல் எனப் பொருள்படும், ஆனால் வேறேதேனும் தவறைப் புரிவதற்குச் சான்றாக வைத்திருக்கக்கூடிய ஏதேனும் தகவலை உள்ளடக்காது; அத்துடன்

(இ) "அந்தரங்கத் தகவல்" என்பது, எவரேனுமாள் அந்தரங்கமாக வைத்திருப் பதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க் கக்கூடிய ஏதேனும் படம், கட்புல அல்லது செவிப்புல விபரங்கள் உட்பட தனிப்பட்ட

தகவல்கள் எனப் பொருள்படும், ஆனால் வேறேதேனும் தவறைப் புரிவதற்குச் சான்றாகவிருக்கக்கூடிய ஏதேனும் தகவலை உள்ளடக்காது.

*<u>எடுத்துக்காட்டுகள் -</u>*

*(அ) ர மற்றும் ல என்போர் முடிவடைந்துள்ள உறவுமுறையொன்றில் முன்னாளில் இருந்துள்ளார். அடையாளம் காண்பதற்கு வசதியளிப்பதன்மூலம் அல்லது ஏனையோரை ல வுடன் தொடர்பு கொள்வதற்கு இயலச் செய்வதன்மூலம் ல விற்கு தொல்லை ஏற்படுத்துவதற்கு உட்கருதி ல இன் புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கம் உட்பட சமூக ஊடகத் தளமொன்றில் ர பதிவொன்றை எழுதுகின்றார். ல அப்பதிவுகளைப் பார்க்கவில்லை, ஆனால், ல என்பவரை உடலுறவுக்காக உத்தேசித்து (பதிவுகளை வாசித்த) அறிமுகமற்றவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புக்களையும் மற்றும் குறுஞ் செய்திச் சேவைகளின்மூலமான குறுஞ்செய்திகளையும் ல பெறுவதுடன் அவற்றினால் அவர் தொல்லைக்கும் உள்ளாக்கப்படுகின்றார். அத்தகைய பதிவு தொடர்பில் ர என்பவர் இப்பிரிவின்கீழான தவறொன்றுக் குக் குற்றவாளியாகின்றார்.*

*(ஆ) ர மற்றும் ல என்போர் முடிவடைந்துள்ள உறவுமுறையொன்றில் முன்னாளில் இருந்துள்ள னர். நியாயமான ஆளொருவர் அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு எதிர்பார்க்க முடியுமான ர என்பவரின் உடைமையிலுள்ள ல என்பவரின் புகைப்பட மொன்றை ர என்பவர் பதிவிடுகின்றார். அத்தகைய பதிவு தொடர்பில் ர என்பவர் இப்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளி யாகின்றார்.".*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(2அ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி நிகழ்நிலைக் கணக்கொன்று என்ற வகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக ஆளொருவரின் வெளிப்படையான சம்மதமின்றி அவ்வாள் தொடர்பாக நிபந்தனைக்குட்படுத்துகின்ற அல்லது ஆபாசத் தன்மையினதான ஏதேனும் புகைப்படத்தை கேட்பொலியை அல்லது காணொளியை வெளியிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "சமூக ஊடகக் கணக்குக்கு அல்லது எந்த இணையச் சேவை இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின்மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணையச் சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளருக்கு"

என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சமூக ஊடகக் கணக்குக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கோருகின்ற அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 அம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "சமூக ஊடகக் கணக்குக்கு அல்லது எந்த இணைய அணுக்கச் சேவை வழங்குநரின் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின்மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணையச் சேவை வழங்குநருக்கு அல்லது இணைய இடையீட்டாளருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சமூக ஊடகக் கணக்குக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கு" என்னும் செற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நிகழ்நிலைக் கணக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும், பின்வரும் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகின்ற ஆளொருவர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்வரும் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகின்ற எவரேனுமாள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அல்லது இணையச் சேவை வழங்குநர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சேவை வழங்குநர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில். "தெரிவு செய்திருந்தால்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தெரிவு செய்திருந்தால்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "திரிபுபடுத்தியிருந்தால்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, திரிபுபடுத்தியிருந் தால்." என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கி விடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(6) இணையச் சேவை வழங்குநர் ஒருவர் அல்லது இணைய இடையீட்டாளர் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடம் ஒன்று தொடர்பில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புக்களுடன் இணங்கியொழுகுவதற்கான நியாயமான நடைமுறைக்குகந்த எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளார்.

(7) இணையச் சேவை வழங்குநர் ஒருவர் அல்லது இணைய இடையீட்டாளர் ஒருவர் அல்லது அத்தகைய இணையச் சேவை வழங்குநரின் அல்லது இணைய இடையீட்டாளரின் அலுவலரொருவர், ஊழியரொருவர் அல்லது முகவரொருவர்,

ஆணைக்குழுவினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதில் அல்லது இச்சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்று தொடர்பில் எடுத்திருக்கப்பட வேண்டிய எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக நியாயமான கவனத்துடனும் நல்லெண்ணத்துடனும் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, "ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பு ஏற்படும்பட்சத்தில் அத்தகைய மறியற்றண்டனைக்காலம் அல்லது குற்றப்பணம் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கதின் 31 ஆம் பிரிவு, "ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பு ஏற்படும் பட்சத்தில் அத்தகைய மறியற்றண்டனைக்காலம் அல்லது குற்றப்பணம் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில், "அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் அவர் தோன்றுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய இணைய இடையீட்டாளர் அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் தோன்றுதல் வேண்டும் அல்லது அத்தகைய இடையீட்டாளர் சார்பில் அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் தோன்றுவதற்கென பிரதிநிதி ஒருவருக்கு முறையாக அதிகாரமளித்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் -

(அ) "பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உப பரிசோதகர் என்னும் பதவி நிலைக்குக் குறையாத பொலிசு அலுவலரொருவரினால் அத்தகைய நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிவானொருவரினால் அது சார்பில் வழங்கப்பட்ட தேடுதல் ஆணையொன்றின் அதிகாரத்தின்கீழ் பின்வருவனவற்றைச் செய்வதற்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பிரவேசிப்பதற்கும்;" என்னும் சொல்லுக்கு பதிலாக, "பிரவேசிப்பதற்கும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தகவல்களை அணுகுவதற்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தகவல்களை அணுகுவதற்கும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஈ) அவ்வுட்பிரிவின்பந்திகள் (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றை நீக்குவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்;

"(4அ) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக பொலிசுக்கு உதவுவதற்கு அழைக்கப்

பட்ட நிபுணர் ஒருவர், உப பரிசோதகர் என்னும் பதவிநிலைக்குக் குறையாத பொலிசு அலுவலரொருவரினால் அளிக்கப்பட்ட அதிகாரத்துடன் -

(அ) அத்தகைய புலனாய்வின் நோக்கத்துக்கு அவசியமானவாறான ஏதேனும் ஆவணத்தை, தனவலை, சாதனத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படி எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) எவையேனும் போக்குவரத்துத் தரவுகளை வெளிக்காட்டும்படி எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(இ) வாய்மொழிமூலமாக எவரேனும் ஆளை விசாரணை செய்யலாம்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியாயமானமுறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்யலாம்.";

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(7) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றில் ஈடுபடும் ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய புலனாய்வின்போது அவரது அறிவுக்கெட்டக்கூடியவாறான எல்லாத் தகவல்கள் தொடர்பிலும் கடுமையான அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் அவரது அறிவுக்கெட்டியுள்ள ஏதேனும் தகவலை இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற அளவுக்குத்தவிர எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துதல் அல்லது எத்தகையதுமான நோக்கமெதற்கும் பயன்படுத்துதல் ஆகாது.

(8) எவரேனும் இணைய இடையீட்டாளரின் இணையச் சேவை வழங்குநர் எவரும் அல்லது எவையேனும் தரவுகளை அல்லது வேறு எவையேனும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான பொறுப்பைக்கொண்டுள்ள வேறு ஆளெவரும், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் புலனாய்வின் நோக்கத்துக்காக எவையேனும் அத்தகைய தரவுகளை அல்லது வேறு எவையேனும் தகவல்களை வெளிப்படுத்தியமைக்காக குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பெதனையும் கொண்டிருத்தலாகாது.

(9) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிரிவு 13 இன்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறு தவிர்ந்த இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளையும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே புரியப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பில் இச்சட்டத்தின்

ஏற்பாடுகளினது ஏற்புடைமையின் நோக்கங்களுக்காக, அத்தகைய தவறுகள் இலங்கையில் புரியப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் *49* ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"விதிகள் என்னும் வழிவகையில் ஆணைக்குழு நடைமுறைக் கோவைகளை ஆக்குதல்

*49.* (1) ஆணைக்குழுவானது, (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட இணையச் சேவை வழங்குநர்களுக்கும் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கும் ஏற்புடையற் பாலனவான நடைமுறைக் கோவைகளை, விதிகள் என்னும் வழிவகையில், பின்வரும் கருமங்கள் தொடர்பில் வழங்குதல் வேண்டும்:-

(அ) வெறுப்புப் பேச்சு, வன்முறைகளுக்கான தூண்டுதல், தவறான தகவல், பிழையான தகவல், இணையவழி கொடுமைப் படுத்தலும் தொந்தரவும் மற்றும் நிகழ்நிலை பாலியல் சுரண்டலும் துர்ப்பிரயோகமும் உட்பட தீங்கான நிகழ்நிலை உள்ளடக்கம் மற்றும் நடத்தை என்பவற்றை விளித்துரைத்தல்;

(ஆ) ஒருங்கிணைக்கப்பட்ட மெய்யுறுதிப் படுத்தப்படாத நடத்தையையும் மற்றும் நிகழ்நிலைக் கணக்குகளின் வேறேதேனும் தவறான பயன்பாட்டையும் கண்டறிதல், கட்டுப்படுத்தல் மற்றும் அவற்றுக்கெதிராகப் பாதுகாத்தல்;

(இ) தீங்கான உள்ளடக்கத்தை மட்டுப் படுத்துவதற்கு எடுக்கப்பட்ட செயல் முனைப்பான நடவடிக்கை பற்றிய தொழிற்பாட்டு நியமங்களையும் வெளிப் படையான அறிக்கையிடுதலையும் அமைத்தல்;

(ஈ) இணைய இடையீட்டாளர்களின் வகைகளை விதித்துரைத்தல்;

(உ) இலங்கையில் அறிவிக்கப்பட்ட ஓர் அரசியல் நோக்கமொன்றை நோக்கி இயக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் செலுத்திய உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட அனுசரணையாளர் மற்றும் வேறு தகவல்களின் வெளிப்படுத்துகையை அதிகரிக்கும் நோக்கத்துக்காக இணைய இடையீட்டாளர்களை விதித்துரைத்தல்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதற்கான காலப் பகுதியை குறித்துரைத்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பு எனும் வகையில், வர்த்தமானியில் அவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தன்னார்வ அடிப்படையில் (1) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (ஊ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் நடைமுறைக்கோவையொன்றை வகுத்தமைப்பதற்கான சந்தர்ப்பமொன்றை இணையச் சேவை வழங்குநர்களுக்கும் இணைய இடையீட்டாளர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

(3) இணையச் சேவை வழங்குநர்களும் மற்றும் இணைய இடையீட்டாளர்களும் -

(அ) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள்

தன்னார்வ அடிப்படையில் நடைமுறைக் கோவையொன்றை வகுத்தமைக்கத் தவறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) ஆணைக்குழுவுடன் ஒன்றிணைந்து நடைமுறைக் கோவையொன்றை கூட்டாக வகுத்தமைப்பதற்கான தமது விருப்பத்தை ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கின்றவிடத்து,

ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் அத்தகைய நடைமுறைக் கோவையொன்றை வகுத்தமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழு (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செயலாற்றுவதன்மேல், இலத்திரனியல் வடிவத்திலான நடைமுறைக் கோவையின் வரைவென்றை வெளியிட்டு மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குள் இணையச் சேவை வழங்குநர்களிடமிருந்தும் இணைய இடையீட்டாளர்களிடமிருந்தும் பின்னூட்டங்கள், அவதானிப்புக்கள் என்பவற்றை நாடுதல் மற்றும் நடைமுறைக் கோவை வரைவின் நடைமுறைப்படுத்தலுக்காக இணையச் சேவை வழங்குநர்களினதும் இணைய இடையீட்டாளர்களினதும் ஒருபாட்டையும் கருத்தொருமிப்பையும் எய்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

(5) ஆணைக்குழு (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செயலாற்றுவதன்மேல், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நடைமுறைக் கோவையை வழங்க முன்னர் மூன்று மாதங்களைக் கொண்டவொரு

காலப்பகுதிக்கு நடைமுறைக் கோவையின் வரைவு பற்றிய பகிரங்கக் கலந்துரையாடல்களை வைப்ப தற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை கோவைக்கு இணங்கியொழுகுதல் இணையச் சேவை வழங்குநர்களினதும் மற்றும் இணைய இடையீட்டாளர்களினதும் கடமையாதல் வேண் டும்.

(7) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(8) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங் களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட ஏதேனும் விதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறும் வகையில் இல்லா தொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

(அ) "பொய்யான கூற்று" எனும் சொல்லமைப்புக்கான வரை விலக்கணத்தில், "ஏற்றிக்கூறுகையை" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஏற்றிக்கூறுகையை அல்லது உருவகத்தை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) "மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கு" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், "அப்பிரதிநிதித்துவம், கணக்கை வைத்திருப்பவரின் ஆளடையாளம் பற்றி ஏதேனும் இணைய இடையீட்டாளர் சேவையின் இலங்கையிலுள்ள இறுதிப் பயனர்களை பிழைவழியுய்க்கும் நோக்கத்துக்காக ஆக்கப்படுகின்றது மான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அப் பிரதிநிதித்துவம், இச்சட்டத்தின்கீழான தவறொன்றை புரியும் நோக்கத்துக்காக கணக்கை வைத்திருப்பவரின் ஆளடையாளம் பற்றி ஏதேனும் இணைய இடையீட்டாளர் சேவையின் இலங்கையிலுள்ள இறுதிப் பயனர்களை பிழைவழியுய்ப்பதற்கு ஆக்கப்படுகின்றதுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.